(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2020 ஆகஸ்ட் 21 வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

### பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்ற சபை முதல்வர்,— தெரிவுக் குழு (இல.1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 114 இன் பிரகாரம், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் சேவைக்கான தெரிவுக் குழுவானது, தவிசாளராக சபாநாயகரையும் பாராளுமன்றத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படவேண்டிய அரசியல் கட்சிகளின் தலைவர்களையோ அல்லது அவர்களின் நியமத்தர்களையோ உள்ளடக்கிய பன்னிரண்டு (12) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

3.

பராளுமன்றச் சபை முதல்வர்,— தெரிவுக்குழு (இல.2),— இன்றைய தினம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம், ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் போது இத்தெரிவுக் குழுவில் பின்வரும் பன்னிரண்டு (12) உறுப்பினர்களும் சேவையாற்றுவார்களாக :—

கௌரவ நிமல் சிறிபால த சில்வா

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 1),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2020 ஆகஸ்ட் 27 ஆம் திகதி, வியாழக்கிழமை மற்றும் 28 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை ஆகிய தினங்கள் சபை அமர்வு தினங்களாக இருக்குமாக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 2),— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், 2020 ஆகஸ்ட் 27 ஆம் திகதி, வியாழக்கிழமை மற்றும் 28 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரங்கள், மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 3),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2020 ஆகஸ்ட் 27 ஆம் திகதி, வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

கௌரவ நிபுண ரணவக,— அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 32(4) மற்றும் 33(2)(அ) உறுப்புரைகளின் பிரகாரம், அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனமானது விவாதிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.